|b09291 44cookmF (English)

|c09291_000_44cookm.xml (Task 179040)

|v1

ஞாயிறு காலைக் கூட்டம்

|v2

பொது மாநாடு

|v3

ஞாயிறு காலைக் கூட்டம்

|v4

அக்டோபர் 3, 2010

|v5

விசுவாசிகளின் ஒரு மாதிரியாயிரு

|v6

எடுத்துக்காட்டு

|v7

விசுவாசம்

|v8

நல்லொழுக்கம்

|v9

தரங்கள்

|v10

இளமை

|v11

பொது மாநாடு

|v12

விசுவாசிகளின் ஒரு மாதிரியாயிரு

|v13

மேரி என். குக்

|v14

இளம் பெண்கள் பொதுத் தலைமையில் முதல் ஆலோசகர்

|v15

“விசுவாசத்திலும் தூய்மையிலும் ஒரு எடுத்துக்காட்டாயிருக்க” உங்களை நா
ன் அழைக்க விரும்புகிறேன்.

|v16

சிறிது காலத்திற்கு முன் எங்கள் குடும்பத்தில் ரூபி பிறந்தாள். அவளது இனி
மையான முகத்தை நான் பார்த்தபோது, பூமிக்கு அவள் வருவதற்கு முன்பு நம
து பரலோகப் பிதாவுடன் அவள் வசித்தாள் என்பதை நினைத்து நான் வியப்ப
டைந்தேன். அவரது மகிழ்ச்சியின் மகா திட்டத்தை அவள் ஏற்றுக்கொண்டு அ
வரையும் நமது இரட்சகரான இயேசு கிறிஸ்துவையும் பின்பற்ற அவள் தீர்மா
னித்தாள்.1 அவளது தீர்மானத்தால், அநித்தியத்தை அனுபவிக்கவும் நித்திய ஜீ
வனுக்கு நேராக முன்னேறவும் பூலோகத்துக்கு வர அவள் அனுமதிக்கப்பட்
டாள். அவளது ஆவி அவளது சரீரத்துடன் இணைந்து, கற்றுக்கொள்ளும் ஒரு
 காலத்திற்குள் ரூபி பிரவேசித்திருக்கிறாள். அதில் அவள் தன்னை நிரூபித்து, கி

றிஸ்துவைப் பின்பற்ற தீர்மானித்து, நித்திய ஜீவனுக்கு தகுதியுள்ளவளாக ஆகுவதற்கு ஆயத்தப்படலாம்.

|v17

தூய்மையானவளாக இந்த பூமிக்கு ரூபி வந்தாள் ஆனால், திட்டத்தின் ஒரு அங்கமாக துயரங்களையும் சோதனைகளையும் அவள் அனுபவித்து அவள் தவறுகளைச் செய்வாள். ஆயினும், நமது இரட்சகரின் பாவநிவர்த்தியின் மூலமாக ரூபி மன்னிக்கப்பட்டு, சந்தோஷத்தின் ஒரு பரிபூரணத்தை அவள் பெற்று, மீண்டும் தூய்மையாக்கப்பட்டு நமது பரலோகப் பிதாவுடன் நித்தியமாய் வாழ ஆயத்தப்படுவாள்.

|v18

அவள் பிறந்து சில மணிநேரங்களுக்குப் பின், இந்த விலையேறப்பெற்ற குழந்தையை எனது கரங்களில் தூக்கிவைத்துக்கொள்ள எனக்கு சிலாக்கியமிருந்தது. “அவளது பெயருக்கேற்றார்போல, அவள் ஒரு குணசாலியான பெண்ணாகவும், தூய்மையாகவும் விலையேறப்பெற்ற பெண்ணாகவுமிருக்க நாம் ரூபிக்கு கற்றுக்கொடுக்கவேண்டுமென”2 நான் அவளது தாயிடம் சொன்னேன்.

|v19

“இன்றே அதை நான் ஆரம்பிக்கிறேன்” என அவளின் தாய் சொன்னாள்.

|v20

“இன்றே ஆரம்பிக்க” ரூபியின் தாய் என்ன செய்வாள்? நித்திய ஜீவனின் பாதையில் நமது பிள்ளைகளை, நமது இளம்வயதினரை நடத்த பெற்றோர்களாக, தாத்தா பாட்டிகளாக, தலைவர்களாக நாம் என்ன செய்யலாம்? “விசுவாசிகளாய் (மாதிரிகளாக) நாம் இருக்கவேண்டும்”3.

|v21

“நமது பிள்ளைகள் செய்ய நாம் விரும்பாத எந்த காரியத்தையும் செய்ய நாம் ஒருபோதும் நம்மை அனுமதிக்கக்கூடாது. நம்மைப் பார்த்து அவர்கள் செய்யவேண்டுமென நாம் விரும்புகிறவற்றுக்கு நாம் ஒரு மாதிரியை அமைக்கவேண்டும் ”4 என தீர்க்கதரிசி பிரிகாம் யங் சொன்னார். அந்த நல்ல மாதிரியாயிருப்பதில் நாம் ஒவ்வொருவரும் இன்றே ஆரம்பிக்கலாம்.

|v22

“இரட்சிப்புக்கு தேவையான இரண்டு கொள்கைகளான விசுவாசத்திலும், தூய்மையிலும், விசுவாசிகளின் ஒரு மாதிரியாயிருக்க”5 இன்று உங்களை அழைக்க நான் விரும்புகிறேன்.

|v23

விசுவாசத்தில் விசுவாசிகளுக்கு ஒரு மாதிரியாயிருங்கள். அப்படியாக, வார்த்தையிலும் மாதிரியிலும் உங்கள் பிள்ளைகளுக்கு சாட்சியளிக்க ஆயத்தப்படுவதில் இயேசு கிறிஸ்துவின்மீது உங்கள் சொந்த விசுவாசத்தையும் சாட்சியையும் தீவிரமாக பலப்படுத்துங்கள்.

|v24

விசுவாசத்தின் ஒரு மாதிரியாயிருந்த ஒரு அற்புதமான தாயின் கதையை நான் உங்களுக்குக் கூறுகிறேன். தீர்க்கதரிசி ஜோசப் ஸ்மித் இளம் வாலிபனாக இருந்தபோது, அவரது தாய் லூசி மேக் ஸ்மித்திடமிருந்து தேவனில் விசுவாசத்தைப் பற்றி அவர் கவனித்து கற்றுக்கொண்டார். வேதங்களை ஆராய்ந்து லூசி பதில்களைத் தேடினார்.6 அவருடைய தாயைப்போலவே வழிநடத்துதலுக்காக வேதாகமத்தை வாசித்து ஜோசப்பும்கூட அந்த பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டார்.7

|v25

ஜெபத்தின் மூலமாக தனிமையில் கர்த்தரின் உதவியை நாடியதில் குடும்ப பிரச்சினைகளை லூசி தீர்த்துக்கொண்டாள். ஒரு நாள் மதத்தைப்பற்றிய ஒரு கருத்து வேறுபாடு அவளது குடும்பத்தில் வந்தபோது, “பக்கத்திலிருந்த செரி மரங்களடர்ந்த ஒரு அழகான தோப்புக்குள் சென்று கர்த்தரிடம் ஜெபிக்கப்போவதாக லூசி சொன்னாள்”.8

|v26

அவளுக்கு உடல்நலக் குறைவுகள் வந்தபோதும் லூசி மிகுந்த விசுவாசத்துடன் ஜெபித்தாள். எலும்புருக்கி நோயினால் ஏறக்குறைய ஜோசப் தனது கால்களை இழக்கப் பார்த்தபோதும், டைபாய்ட் காய்ச்சலால் ஜோசப்பின் சகோதரியான சோப்ரோனியா மரிக்கும் தறுவாயிலிருந்தபோதும் ஒரு இளம் பெண்ணாக மிக மோசமான காய்ச்சலிலிருந்து அவள் குணமடைந்தாள். சோப்ரோனியாவின் சுகவீனத்தைப்பற்றி லூசி எழுதும்போது, “எனது குழந்தையை நான் உற்றுப் பார்த்தேன். . . நானும் எனது கணவரும் எங்களது கைகளை ஒன்றாகப் பற்றிக்கொண்டு படுக்கையருகில் முழங்கால்படியிட்டு கர்த்தரிடத்தில் எங்கள் துக்கத்தையும் வேண்டுகோள்களையும் ஊற்றினோம்”9. சோப்ரோனியா உயிர் பிழைத்தாள். அந்த ஜெபங்களுக்கு பதில்களைப் பெறுவதில் விசுவாசத்துடன் அவள் ஜெபிப்பதை லூசியின் பிள்ளைகள் பார்த்தார்கள் என நான் உறுதியாக நம்புகிறேன்.

|v27

வழிகாட்டுதலுக்காக விசுவாசத்தில் லூசி ஜெபித்தாள், மரங்களடர்ந்த ஒரு தோப்பிற்குள் ஜோசப்பும் சென்று, அவரது தாய் செய்ததைப்போல கர்த்தரிடமிருந்து ஒரு பதிலைத் தேடி விசுவாசத்துடன் அவர் ஜெபித்தார்.

|v28

*தனியாகவும், நமது பிள்ளைகள் மற்றும் இளவயதினருடனும் வேதங்களைப் படிப்பதன் மூலமும், ஜெபத்தின் மூலமும் லூசியைப்போல நாமும் இயேசு கிறிஸ்துவின்மீதுள்ள அவர்களுக்குள்ள விசுவாசத்தையும் சாட்சியையும் எவ்வாறு பலப்படுத்துவதென்பதை அவர்களுக்குக் காட்டவேண்டும்.*

|v29

*லூசியைப் போலல்லாமல் வேதாகமத்தைவிட அதிகமாக இன்று நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். நித்திய ஜீவனுக்கான பாதையில் “பாதுகாப்பாக நம்மை வழிநடத்த”10 பிற்கால சுவிசேஷங்களும், நமது பிற்காலத் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளும் நமக்கிருக்கின்றன. பாதையில் “தேவனுடைய வார்த்தைக்கு” 12 அது ஒப்பிடப்படுவதைப் போல, “இருப்புக்கோலின் நுனியைப் பிடித்து நிலை கொண்டவர்களைப்பற்றி”11 மார்மன் புத்தகத்தில் நாம் படிக்கிறோம். சோதனைகள் நிரம்பியுள்ள இன்றைய உலகத்தில், தேவனுடைய வழிகளிலிருந்து நம்மை அதிக தூரத்தில் இழுக்க, தந்திரமான வழிகளில் சாத்தான் முயற்சிப்பதில் “இறுக்கமாகப் பிடிப்பதென்பது” சவாலாக இருக்கலாம். கோலில் ஒரு கையும் உலகத்தில் ஒரு கையுமாக நாமிருந்தால், பாதையில் தங்களின் வழியை தவறவிடுவதன் அபாயத்தில் நமது பிள்ளைகளையும் வாலிபர்களையும் நாம் விடுகிறோம். நமது மாதிரி குழப்பமாயிருந்தால், யாக்கோபுவின் வார்த்தைகளைப்போல, “(நமது) கெட்ட மாதிரிகளால் (நமது) பிள்ளைகளின் திடநம்பிக்கையை நாம் இழக்கிறோம்.”13*

|v30

*பெற்றோர்களே, தாத்தா பாட்டிகளே, தலைவர்களே உங்கள் செய்தி தெளிவாக இருக்கவேண்டும். கோலில் இரண்டு கைகளையும் வைத்திருப்பதுவும் சுவிசேஷங்களிலும் பிற்காலத் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளிலும் காணப்படுகிற சத்தியங்களால் வாழ்வதலிருந்து மட்டுமே தெளிவு பிறக்கிறது. லூசியைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களால் உருவாக்க முடியாமல் போகலாம், ஆனால் நிச்சயமாக நாளைய தலைவர்களை நீங்கள் உருவாக்குவீர்கள். அவர்களின் விசுவாசத்திற்கு உங்கள் செயல்கள் உறுதியாக இணைக்கப்பட்டிருக்கும்.*

|v31

*அடுத்ததாக, தூய்மையில் விசுவாசிகளுக்கு ஒரு மாதிரியாயிருங்கள். தூய்மையாகுவதற்கு நமக்கிருக்கிற ஒரே வழி இரட்சகரின் பாவநிவர்த்தியின் மூலமாகவே. நம் ஒவ்வொருவருக்கும், தூய்மைப்படுத்துவதற்கு மாறுவதற்கான செயல்முறை விசுவாசத்துடனும், மனந்திரும்புதலுடனும் நமது முதல் உடன்படிக்கையான ஞானஸ்நானத்துடனும் ஆரம்பமாகிறது.*

|v32

*அவர்கள் தண்ணீரிலிருந்து வெளியே வந்தவுடனேயே அவர்கள் உலகத்திலிரு
ந்து வெளியே வருகிறார்கள், தேவனின் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறார்கள்
என நாம் போதிக்கிறோம். உடன்படிக்கையால், அவரது கட்டளைகளைப் பி
ன்பற்றுவதாக அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.”14 என நமது பிள்ளைகள், த
ங்களின் ஞானஸ்நான உடன்படிக்கையில் வாழ அவர்களுக்குதவ மூப்பர் ராப
ர்ட் டி. ஹேல்ஸ் ஆலோசனையளித்தார்.*

|v33

*“தேவனுக்கான நமது ஒப்புக்கொடுத்தல்களை மதிக்க ஒரு பலமான பொறுப்
பின் கீழ் உடன்படிக்கை நம்மை வைக்கிறது. நமது உடன்படிக்கைகளை கைக்
கொள்ள, அந்த உடன்படிக்கைகளை மதிப்பதிலிருந்து நம்மை தடுக்கிற நடவ
டிக்கைகளை அல்லது ஆர்வங்களை நாம் விட்டுவிடவேண்டும்”15*

|v34

*உடன்படிக்கைச் செய்வதன் இந்த பரிசுத்த பொறுப்பு மற்றும் உடன்படிக்கை
யைக் கைக்கொள்வதிலிருந்து வருகிற தூய்மையின் ஆசீர்வாதங்களைப் புரிந்து
கொள்ள வாலிபர்களுக்குதவ, இளம் வயதினருக்கான பெலனுக்காக ஒரு அற்
புதமான கருவி. பிற்காலத் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் அதில் அடங்கியிரு
க்கின்றன.நேரானதும் குறுகலானதுமான பாதையின் வழியாக பாதுகாப்பாக
அவர்களை வழிநடத்துகிற இருப்புக்கோல், அவர்களின் முன்னேற்றத்தை தட
ங்கல் செய்கிற சாத்தானின் தந்திரங்களிலிருந்து அவர்களை தூர விலக்குகிறது.
“நற்குணமும், இனிமையானதுமான” கீழ்ப்படிவதிலிருந்தும் நாடுவதிலிருந்து
ம்”16 வருகிற அநேக ஆசீர்வாதங்களையும் இந்த கைப்பிரதியில் நீங்கள் காண்
பீர்கள்.*

|v35

*பெற்றோர்களே, இந்த கைப்பிரதியின் ஒரு சொந்த பிரதியை வாங்கி, அதை அ
டிக்கடி படியுங்கள். நீங்களும் தரத்தோடு வாழுங்கள். தரங்களின் அர்த்தத்தை
யும் நோக்கத்தையும் அவர்களே கண்டுபிடிக்கவும் அவைகளின்படி வாழவும்
அவர்களே விரும்புவதில் விருத்தியடைய அவர்களுக்குதவ சிந்தனையுள்ள வே
தாகம உரையாடல்களை வாலிபர்களுடன் வைத்திருங்கள்.*

|v36

*“பொழுதுபோக்குகளும் ஊடகமும்” மற்றும் “உடையும் தோற்றமும்” என்ற ப
குதிகளில் காணப்படுகிற தரங்கள், குறிப்பாக அறை கூவலாயிருக்கிறது, ஏனெ
னில் உலகத்தின் தரங்களுக்கு அவைகள் அதிகரித்துவரும் எதிர்ப்பாயிருக்கிறது*

|v37

*ஊடகங்களின் நமது சொந்த தேர்ந்தெடுப்பால், நற்குணமும் இனிமையானது*

*மான அதற்கு நாம் மாதிரியாக இருக்கவேண்டும். நமது வீடுகளில் நுழையவி டுகிற ஊடகம், பரிசுத்த ஆவியின் உணர்வை சிறுமைப்படுத்தக்கூடாது, நமது குடும்பத்தின், நண்பர்களின் உறவுகளை முறிக்கக்கூடாது, அல்லது சுவிசேஷ கொள்கைகளுடன் பொருத்தமில்லாத தனிப்பட்ட முன்னுரிமைகளை வெளி ப்படுத்துவதாக இருக்கக்கூடாது. உதாரணமாக, இணையதளம், சமுக ஊடக ம், கைபேசிகள், வீடியோ விளையாட்டுகள், அல்லது தொலைக்காட்சி பார்த் தல் போன்றவற்றிற்கு அதிக நேரத்தை செலவழித்தல், பயனுள்ள வேலைகளை ச் செய்வதிலிருந்தும் மற்றவர்களுடன் பயனுள்ள வகையில் உரையாடுவதிலிரு ந்தும் நம்மைத் தடுக்கின்றன என்பதைப்  புரிந்துகொள்ள நமது பிள்ளைகளுக் கு நாம் உதவலாம்.*

|v38

*நமது உடையாலும் தோற்றத்தாலும் நற்குணமும் இனிமையாவதற்கும் நாம் மாதிரியாயிருக்கலாம். உடன்படிக்கையின் மக்களாக, நமது உடல்களைப் ப ராமரிக்க, பாதுகாக்க, சரியாக ஆடையணிய நமக்குப் பொறுப்புகளிருக்கிறது.  ஆலயங்களாக, தேவனிடமிருந்து வந்த வரங்களாக நமது உடல்களை நாம் ம திக்கிறோம் என புரிந்துகொள்ள நமது பிள்ளைகளுக்கும் இளவயதினருக்கும் நாம் உதவவேண்டும்.17 மிகவும் இறுக்கமான, அவலட்சணமான, அல்லது வே று எந்த வகையிலும் உடம்பைக் காட்டக்கூடிய அநாகரிகமான ஆடைகளை வாங்குவதையும் அணிவதையும் மறுப்பதிலிருந்து நாம் மாதிரியாயிருக்கிறோ ம்.*

|v39

*தேவனின்மீதுள்ள தங்களின் அன்பாலும் அவரது வாக்களிக்கப்பட்ட ஆசீர்வா தங்களினாலும் உடன்படிக்கையைக் கைக்கொள்கிறவர்கள், “சதா காலங்களி லும் . . . . எல்லா இடங்களிலும்”18 கீழ்ப்படிபவர்களாயிருக்க முயற்சிக்கிறார் கள். ஒரு மாலை நேரம் எனது கணவருடன் நான் நடந்து போய்க்கொண்டிருக் கும்போது வெளியரங்கில் நடைபெற்றுக்கொண்டிருந்த ஒரு திருமண வரவேற் பு நிகழ்ச்சியை கடந்துபோனோம். அந்த மக்களை எங்களுக்குத் தெரியாது, இ ருந்தும் நற்குணத்தின் உடனடியான ஒன்று ஆழமாக பதிந்தது. அவர்களின் இ சை மற்றும் ஆடையின் தேர்ந்தெடுப்புகள் நன்றாயிருந்தன. மணப்பெண்ணின்  அழகான ஆடை நாகரிகமாயிருந்ததில் எந்த சந்தேகமுமில்லை. அப்படியே ம ணப்பெண்ணின் தோழிகளின் ஆடைகளுமிருந்தன. அந்த நாளின் புனிதத்தன் மையுடன் உலகத்தின் வழிகளை கலப்பதற்கு இந்த குடும்பம் தீர்மானிக்கவில் லை.*

|v40

*இப்போது, நமது சபையின் அற்புதமான இளம் வயதினருக்கு ஒரு வார்த்தை யை நான் கூறுகிறேன். உங்களின் நண்பர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், தலை வர்களுக்கும், குடும்பத்தினருக்கும் உங்களின் நீதியான மாதிரிகளுக்கு நான் உ ங்களுக்கு நன்றி சொல்கிறேன். உங்கள் குடும்பத்தில் நீங்கள் ஒருவர் மட்டுமே சபையின் அங்கத்தினர் என்பதை நான் காண்கிறேன். தனியாகக்கூட நீங்கள் ச*

*யைக்கு வரலாம்.உங்கள் ஒப்புக்கொடுத்தலுக்கும் நீதியுள்ள மாதிரிக்கும் நான் உங்களை புகழுகிறேன். பொறுமையாயிருங்கள், தொடர்ந்து நீதியாய் வாழுங் கள். அநேகர் உங்களுக்கு உதவலாம். “ஒரு எடுத்துக்காட்டான குடும்பம்கூட. . . . உண்மையாக அன்பு வைத்திருக்கிற நல்ல மனிதர்களிடமிருந்து (பெண்கள் ) வருகிற ஆதரவான உதவிகள் அனைத்தையும் பயன்படுத்தலாம்”19 என த லைவர் தாமஸ் மான்சன் சொன்னார்.*

|v41

*விசுவாசிகளுக்கு மாதிரியாயிருக்கிற தலைவர்களையும் நண்பர்களையும் உங்க ள் தொகுதிகளிலும் பிணையத்திலும் உங்களைச் சுற்றிப் பார்த்துத் தேடி அவர் களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்.*

|v42

*நான் வாலிபப்பெண்ணாக இருந்தபோது, விசுவாசிகளின் மாதிரிகளை நான் க ண்டேன். எனது பெற்றோரையும் சேர்த்து அதில் ஒருவர் எனது அத்தை கர்மா கட்லர். எனக்கு 16 வயதாயிருக்கும்போது, ஒரு பிணையத் தரங்களின் இரவி ல் அவர் பேசியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. கற்புடனிருத்தல் மற்றும் ஆலயத் திருமணத்திற்குத் தகுதியாயிருப்பதன் முக்கியத்துவத்தைப்பற்றி அவ ள் போதித்தாள். அவளது சாட்சியால் நான் ஆழமாகத் தொடப்பட்டேன். நா ன் ஒரு சிறுமியாயிருந்த போதிலிருந்து அவளது நற்குணத்தை நான் கவனித்திரு க்கிறேன், அவளது போதனைகளுடன் அது பொருத்தமாயிருந்தது எனக்குத் தெரியும். அவளது மாதிரியைப் பின்பற்ற நான் விரும்பினேன்.*

|v43

*இளம் ஆண்களே, இளம் பெண்களே, விசுவாசத்திலும் தூய்மையிலும் விசுவா சிகளின் ஒரு மாதிரியாயிருக்க* நீங்கள் *இன்றே ஆரம்பிக்கலாம். வேதப் படிப்பி ன், ஜெபத்தின் மூலமாக உங்கள் விசுவாசத்தையும் சாட்சியையும் அன்றாடம் நீங்கள் பெலப்படுத்துங்கள். உங்கள் ஞானஸ்நான உடன்படிக்கையைக் கைக் கொள்ளுங்கள், அது தூய்மையாகவும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்கு த குதியாகவும் உங்களை வைத்திருக்கும். மற்றவர்கள் பின்பற்றக்கூடிய அப்படிப் பட்ட மாதிரியாயிருக்க இன்றே ஆரம்பியுங்கள்.*

|v44

*உங்களுக்குத் தெரியாது, ஒரு நாள் எனது சிறிய ரூபிக்கு நீங்கள் மாதிரியாயிரு க்கலாம். இப்போதைக்கு, நித்திய ஜீவனுக்கான பாதையில் ஒரு அற்புதமான ஆரம்பத்தில் ரூபியிருக்கிறாள். விசுவாசிகளின் மாதிரியாயிருக்க ஒரு தீர்மானத் துடன் ஒவ்வொரு நாளையும் ஆரம்பிப்பதில் அவளது பெற்றோர் அவளது வீ ட்டில் நீதியின் மாதிரிகளை அமைத்துக்கொண்டிருக்கிறாள். தனது சுயாதீனத் தைப் பயன்படுத்துவதில் பின்பற்ற ரூபி தேர்ந்தெடுப்பாள் என நம்புவோம்.*

|v45

*மகிழ்ச்சியின் திட்டத்திற்காக நான் நன்றியுள்ளவளாயிருக்கிறேன். ரூபியும் நம்மில் ஒவ்வொருவரும் மீண்டும் தூய்மையாயிருக்கவும், நமது பரலோகப் பிதாவின் சமுகத்தில் நித்தியமாய் வாழவும் இது ஒன்றுதான் வழி என நான் சாட்சியளிக்கிறேன். நாம் ஒவ்வொருவரும் இன்றே ஆரம்பிப்போம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென்.*

|v46

*குறிப்புகள்*

|v47

1.

|v48

*ஆபிரகாம் 3:22-26 பார்க்கவும்*

|v49

2.

|v50

*நீதிமொழிகள் 31:10 பார்க்கவும்*

|v51

3.

|v52

*1 தீமோத்தேயு 4:12*

|v53

4.

|v54

*Teachings of Presidents of the Church: Brigham Young* (1997), 173.

|v55

5.

|v56

***1 தீமோத்தேயு 4:12***

|v57

6.

|v58

See Lucy Mack Smith, *History of Joseph Smith by His Mother*, ed. Scot Facer Proctor and Maurine Jensen Proctor (1996), 50.

|v59

7.

|v60

See Joseph Smith—History 1:11–12.

|v61

8.

|v62

Smith, *History of Joseph Smith*, 58.

|v63

9.

|v64

Smith, *History of Joseph Smith*, 69.

|v65

10.

|v66

“The Iron Rod,” *Hymns*, no. 274.

|v67

11.

|v68

*1 நெப்பி 8:30*

|v69

12.

|v70

*1 நெப்பி 11:25*

|v71

13.

|v72

*யாக்கோபு 2:35*

|v73

14.

|v74

Robert D. Hales, *Return: Four Phases of Our Mortal Journey Home* (2010), 60.

|v75

15.

|v76

*Preach My Gospel: A Guide to Missionary Service* (2004), 63.

|v77

16.

|v78

Articles of Faith 1:13.

|v79

17.

|v80

*1 கொரிந்தியர் 3:16 பார்க்கவும்*

|v81

18.

|v82

*மோசியா 18:9 பார்க்கவும்*

|v83

19.

|v84

Thomas S. Monson, “Examples of Righteousness,” *Liahona*, May 2008, 66.

|v85

*லியஹோனா*

|v86

*நவம்பர் 2010*